ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1833/27 - 2013 ඔක්තෝබර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.24

*1833/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51* (VII).

***(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்***

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2013, ஒற்றோபர் 17.*

ஒழுங்கு விதி

காலத்துக்குக்காலம், திருத்தப்பட்டவாறானதும் மற்றும் 2011, மே மாதம் 4 ஆந் திகதிய 1704/ 09 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1952 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 10360 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1951 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (நானாவிதமான) ஒழுங்குவிதிகள் அதன் நான்காவது அட்டவணையை நீக்கம் செய்துவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :-

***"நான்காவது அட்டவணை***

*(9 ஆம் ஒழுங்குவிதி)*

***கட்டணங்கள்***

| *இல.* | *விபரணம்* | *கட்டணம் ரூபா தசம்* |
|---|---|---|
| *1.* | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி மற்றும் ஒட்டுத்துண்டு, எல்லா மோட்டார் கோச்சுக்களுக்கும் எல்லா மோட்டார் லொறிகளுக்கும் மோட்டார் கார்களுக்கும், இரு நோக்கு வாகனங்களுக்கும், விசேட நோக்க வாகனங்களுக்கும் அல்லது தரை வாகனங்களுக்கும் அஞ்சல் கட்டணங்கள் உட்பட | *3,300.00* |

**நான்காவது அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இல. | விபரணம் | கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|
| 2. | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி மற்றும் ஒட்டுத்துண்டு, மோட்டார் முச்சக்கர வண்டிகளுக்கும் மோட்டார் முச்சக்கர வேன்களுக்கும் அஞ்சல் கட்டணங்கள் உட்பட | 2,800.00 |
| 3. | இலக்கத் தகடுகளின் முன்புற, பின்புற தொகுதி மற்றும் ஒட்டுத்துண்டு கைஉழவு இயந்திரங்களுக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கும் அஞ்சல் கட்டணங்கள் உட்பட | 2,400.00 |
| 4. | வியாபாரிகள், பழுதுபார்ப்பவர்கள், உற்பத்தியாளர்கள், பொருத்தி உருவாக்குபவர்கள், மூலப் பொருட்களினால் உருவமைப்பவர்கள், புத்தாக்கம் செய்பவர்கள், இசைவாக்கம் செய்பவர்கள், திரிபுபடுத்துபவர்கள் அல்லது நிர்மாணத்தை மாற்றுபவர்கள் ஆகியோருக்கான இலக்கத் தகடுகளின் முன்புற பின்புற தொகுதி | 4,000.00 |
| 5. | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு அளவு 520 மி. மீ. X 110 மி. மீ. | 1,500.00 |
| 6. | மஞ்சள் ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு - அளவு 280 மி. மீ. X 180 மி. மீ. | 1,500.00 |
| 7. | மஞ்சள் ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு - அளவு 280 மி. மீ. X 200 மி. மீ. | 1,500.00 |
| 8. | வெள்ளை ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு - அளவு 300 மி. மீ. X 80 மி. மீ. | 1,000.00 |
| 9. | வெள்ளை அல்லது மஞ்சள் ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு - அளவு 240 மி. மீ. X 130 மி. மீ. | 1,000.00 |
| 10. | சிவப்பு ஒளிதெறிப்புப் பின்னணி இலக்கத் தகடு - அளவு 520 மி. மீ. X 110 மி. மீ. அல்லது 280 மி. மீ. X 180 மி. மீ. | 2,000.00 |
| 11. | இலக்கத் தகட்டு அடையாள ஒட்டுத்துண்டு | 250.00 |
| 12. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகள் தவிர்ந்த நடப்பு இலக்கங்களிலிருந்து 10,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 50,000.00 |
| 13. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகளுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 10,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 6,000.00 |
| 14. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கரவண்டிகள் தவிர்ந்த நடப்பு இலக்கங்களிலிருந்து 20,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 60,000.00 |
| 15. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கர வண்டிகளுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 20,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 8,000.00 |
| 16. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கரவண்டிகள் தவிர்ந்த நடப்பு இலக்கங்களிலிருந்து 30,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 70,000.00 |
| 17. | மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் முச்சக்கரவண்டிகளுக்கு நடப்பு இலக்கங்களிலிருந்து 30,000 வரையிலான விசேட இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 10,000.00" |

*11- 282*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.